## ரூ.105 கோடியில் 97 இராஜகோபுரங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன!

# இந்த ஆண்டு இறுதிக்குள் 2000 கோயில்களுக்கு குடமுழுக்கு!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜுலை 2-

சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு அளித்த பதில் வருமாறு :

**கா.அண்ணாதுரை:** பட்டுக்கோட்டை தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி, முசிறி கைலாசநாதர் திருக்கோயி லுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** முசிறி, கைலாசநாதர் திருக்கோயிலில் ஏற்கெனவே 5 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திருப்பணிகள் நடைபெறுகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள், 2,000 கோயில்கள் குடமுழுக்கு என்ற இலக்கிலே இந்தத் திருக்கோயிலும் உள்ளது. ஆகவே, இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தத் திருக்கோயில் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கா.அண்ணாதுரை:** தஞ்சை மாவட்டத்திலே ஒரத்தநாடு, கோனூர் நாடு, அம்புநாடு, பாப்பாநாடு, முசுவந்தநாடு என குறிப்பிட்ட எல்லைப் பகுதிகள் இன்றளவும் நாடு என்றே அழைக்கப்படுகிறது. அந்த வகையிலே, முசுவந்தநாட்டிலே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர், தஞ்சை மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய ஒரு பகுதியிலே இன்றைக்கு வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சொந்தமான இந்த கைலாசநாதர் திருக்கோயில் திருப்பணிக்கு முழுமையான நிதியை ஒதுக்கி, அதற்கான கட்டுமானப் பணிக்கு உதவியிருக்கிற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு, அந்தப் பகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பட்டுக்கோட்டை தொகுதி, விக்ரமம் ஊராட்சி என்பது ஒரு பெரிய ஊராட்சி. அந்த ஊராட்சிக்குட்பட்ட, தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்கு ஒரு இராஜகோபுரம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அவர் கோரிய அந்த தியாகராஜ சுவாமி திருக்கோயிலினுடைய இராஜகோபுரம் கட்டுகின்ற பணிக்கு, 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயிலுக்கு தொல்லியல் துறையினுடைய அனுமதி பெற்றபிறகு, அதற்கு வரைபடம், மண்டலக் குழு, மாநில ஒப்புதல் பெறவேண்டிய சூழல் இருக்கின்றது. ஆகவே, அந்தப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக் கூறுகள் இருப்பின், அத்துடன் உறுப்பினருக்கு வைக்கின்ற வேண்டுகோள் என்னவெனில், அதற்குள்ளாக உபயதாரர் நிதிக்கு யாரையாவது ஏற்பாடு செய்தால், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆட்சி ஏற்பட்டபிறகு, ஒரு புள்ளிவிவரத்தின்படி சொல்ல வேண்டுமென்றால், 97 இராஜகோபுரங்கள் சுமார் 105 கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, உறுப்பினருக்கு இராஜகோபுரம் மறுக்கப்பட வேண்டுமென்ற நோக்கம் அல்ல. சாத்தியக் கூறுகள் இருந்தால், நிச்சயம் அவர் கோரிய இராஜகோபுரம் கட்டித் தரப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கா.அண்ணாதுரை:** பட்டுக்கோட்டை தொகுதி, காசாங்காடு கிராமத்தில் இருக்கிற முத்துமாரியம்மன் கோயிலுக்கு ஒரு குறைந்த மதிப்பீட்டிலான திருமண மண்டபம் கட்டுவதற்கு அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** காசாங்காடு முத்துமாரியம்மன் கோயில் பிரிவு 49 (1)ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட கோயில், சிறிய கோயில். இருந்தாலும் உறுப்பினர் அவர்களின் தொகுதியிலேயே, 8 கிலோ மீட்டர் தூரத்தில் கண்டேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில், 3 கோடியே 60 இலட்ச ரூபாய் செலவில், திருமண்டபம் கட்டுகின்ற பணி 70 சதவிகிதம் நிறைவுற்றிருக்கின்றது. இந்த



ஆண்டு இறுதிக்குள் அந்தப் பணியை நிறைவு செய்து, திருமண மண்டபத்தை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர இருக்கின்றோம். அவர் கோரிய இடத்திலும், சாத்தியக் கூறு இருப்பின், உபயதாரர் நிதியின் வாயிலாக, அங்கேயும் திருமண மண்டபம் கட்டுவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்வோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்த மூன்று ஆண்டுகளில் 97 திருமண மண்டபங்கள் 305 கோடி ரூபாய் செலவிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகின்றன என்பதை உறுப்பின ருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**க.கணபதி:** மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின், 'ஒரு சட்டமன்றத் தொகுதியில் ஒரு விளையாட்டுத் திடல்' என்ற அறிவிப்பின்படி, இன்றைக்கு அந்த விளையாட்டுத் திடலை அமைப்பதற்கு இடமில்லாத காரணத்தினால் மதுரவாயல் மார்கசகாயஈஸ்வரர் திருக்கோயி லுக்குச் சொந்தமான இடத்தில் அந்தத் திடலை அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்திலே அதற்கான கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தை அதற்காக ஒதுக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** இந்த ஆட்சி தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் ஏற்பட்ட பிறகு, திருக்கோயில்களினுடைய நிலங்கள் ரூ.6,000 கோடி மதிப்பிற்கு மேலாக மீட்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலங்கள் மறுபயன்பாட்டிற்காக, திருக்கோயிலினு டைய திருப்பணிகளுக்கு உதவிடும் வகையில், பல்வேறு வகைகளில் அந்த இடங்களை பல துறைகளுக்குத் தற்போது வாடகைக்குக் கொடுத்து வருகிறோம். வாடகை கேட்பதற்கு முன்பாக பின்பற்ற வேண்டிய சட்ட விதிகள், அந்தத் துறையின் சார்பில், அவர்கள் இந்த இடம் எங்களுக்குத் தேவை; இதற்குண்டான வாடகையை நாங்கள் செலுத்துகிறோம் என்று குறிப்பிட்டு கருத்துரு அனுப்பினால், அது பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கென்று வருகின்ற போது, அதைத் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஆ. தமிழரசி:** என்னுடைய மானாமதுரை தொகுதியில் இளையான்குடி, தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயிலுக்கும், திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலுக்கும் துறையின் சார்பாக நல்ல அறிவிப்புகளைத் தந்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானாமதுரை தொகுதியில் உள்ள ஆனந்தவல்லியம்மன் கோயில் நூறு ஆண்டுகள் பழமையான கோ யில். அங்கு திருத்தேர் உபயதாரர்களால் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு துறையின் சார்பாக நிதியும், அக்கோயிலுக்கான திருப்பணியும் அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அவர் கோரிய திருத்தேரும், திருப்பணியும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்து க்கொள்ளப்பட்டு, தேவையான நிதியை, பொதுநல நிதியிலிருந்து வழங்கப்பட்டு, உடனடியாக அவரது கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சபா. இராசேந்திரன்:** நெய்வேலி தொகுதி, வெங்கடாம்பேட்டை ஊராட்சியில் ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோயிலில் உள்ள ஊஞ்சல் மண்டபம் பழுதடைந்து, கடந்த கால ஆட்சியில் புதுப்பிக்கப்பட்டது. பணி முடிந்த மூன்றே மாதங்களில் அதன் மேற்கூரை இடிந்து விழுந்துவிட்டது; நான்கு தூண்களும் பழுதடைந்துவிட்டன. எனவே, அந்த ஊஞ்சல் மண்டபத்தைப் புதுப்பித்துக் கொடுக்கவும், இந்த பழமைவாய்ந்த கோயிலில் ஒரு திருத்தேர் இல்லை; திருத்தேரை அமைத்துக் கொடுக்கவும், அதேபோல, பண்ருட்டி வட்டம், மேல் காங்கேயன் குப்பம் அங்காளம்மன் கோயிலுக்கு ஓர் இராஜகோபுரம் அமைத்துத் தரவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களாக என்பதை கேட்டு, அமர்கிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** இது போன்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்க ளுக்குத்தான், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, தமிழக முதல்வர் அவர்கள் 300 கோடி ரூபாயை அரசு நிதியாக வழங்கியிருக்கின்றார்கள். அவர் கோரிய அந்த ஊஞ்சல் மண்டபம் தற்போது தொல்லியல் துறையால் ஆவணப்படுத்துகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் பணி முடிவுற்றவுடன் அந்த மண்டபத்தை சீரமைத்துத் தருவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உறுப்பினர் அவர்கள் கோரிய திருத்தேர் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கோரப்பட இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் கோரிய திருத்தேர் மற்றும் ஊஞ்சல் மண்டபங்கள் போன்றவைகள் நிச்சயமாக பணியில் எடுத்துக் கொண்டு, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்தப் பணிகள் துவங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலளித்தார்.

# போராடுங்கள்!



சாதியை எதிர்த்து
போராடுங்கள் ; அது
ஜனநாயகத்திற்கு எதிரி
என்பதால் !
மூடநம்பிக்கையை
எதிர்த்துப் போராடுங்கள்;
அது அறிவியலுக்கு எதிரி
என்பதால் !
ஆதிக்கத்தை எதிர்த்துப்
போராடுங்கள்; அது
சுதந்திரம் - சமத்துவம் -
சகோதரத்துவத்திற்கு
எதிரி என்பதால் !

**...பேரறிஞர் அண்ணா...**

## ஆவின் நிர்வாகம் முன்னேற்றத்தை நோக்கி செல்கிறது!

# பால் விற்பனை 25சதவீதம் அதிகரித்துள்ளது!

## தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கோவையில் பேட்டி!

*கோவை, ஜுலை 2 -*

*கோவை பந்தய சாலை பகுதியில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில், கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆவின் அதிகாரிகளுடன் பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆலோசனை நடத்தினார்.*

*பின்னர்அமைச்சர்மனோ தங்கராஜ் செய்தியாளர்கள் சந்திப்பின்போது;*

*ஆவின் நிர்வாகம் முன்னேற்றத்தை நோக்கி சென்று வருகிறது . கடந்த காலங்களில் பால் கொள்முதலில் ஏற்பட்ட தொய்வு நிலையில், இதுவரையில் 36 லட்சம் பால், ஒன்றியங்கள் மட்டும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு விவசாயிகளை ஊக்குவிக்க, 3 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கல், பால் உற்பத்தியாளர்கள் தரத்தை அந்த இடத்திலேயே தரம் நிர்ணயம் செய்து விலை கொடுப்பது, கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் உதவி, கடனுக்கான வட்டி குறைந்தது, 125 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது, கால்நடைகளுக்கு வட்டியில்லா கடன்ஆகியதிட்டங்களால் ஏற்பட்ட மாற்றத்தால் பால் கொள்முதலில் இந் நிலை எட்டப்பட்டுள்ளது.*

*பல்வேறு துறைகளின் மானியத்துடனான கடனாக கொடுக்கும் திட்டத்தை நடைமுறைபடுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றன.*

*குறைந்தபட்சம் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் காப்பீடு திட்டத்தில் கொண்டு வர 85% அரசு பங்களிப்புடன் மேற்கொள்ள தீவிரப் படுத்த உள்ளோம்.*



*ஓரிரு வாரங்களில் 40 லட்சத்தை கொள்முதல் கடந்து தன்னிறைவை கொண்டு வர முடியும், பால் கையாளும் திறனை 70 லட்சமாக உயர்த்த கட்டமைப்பு பணிகள் நடந்து வருகின்றன. எவ்வளவு பால் வந்தாலும் அதனை கையாளும் திறனை அதிகரிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.*

*இந்தியா முழுவதும் மேய்ச்சல் நிலம் இல்லாத நிலை உள்ளது, விளை நிலங்கள், காலியான நிலங்கள் பல்வேறு நிறுவன ங்கள், வீடுகளாக மாறி மேய்ச்சல் நிலம் குறைந்து வருகிறது. இருக்கக்கூடிய மேய்ச்சல் நிலம், விவ சாயிகளின் நிலங்களும் நல்ல மகசூல் தரக்கூடிய தீவனம் பயிர்களை பயிரிட திட்டங்களையும், ஊறுகாய் புல் என சொல்லக்கூடிய தீவன பயிரை எங்கெங்கு அதிகமாக விளைச்சல் செய்ய முடியுமோ அதை செய்து, மலிவு விலையில் விவசாயிகளுக்கு கொடுக்கும் திட்டமும் இந்தாண்டு கொண்டு வருவதற்கு ஈரோட்டில் திட்டமிடப்பட்டு வருகிறது.*

*பால் விற்பனை 25% அதிகரித்துள்ளது. நெய் போன்ற பொருட்கள் நீண்ட நாட்கள் தாங்கக்கூடிய குணம் உள்ளிட்டவைகள் பற்றி ஆராய்ந்து புதிய வியூகங்களை வகுத்து வருகிறோம்.*

*கிடாரி கன்றுகளை ஈனும் சினை ஊசி ஆரோக்கியமான பழக்கம் என நான் சொல்ல மாட்டேன். தமிழகத்தில் காளை கன்றுகளுக்கு உழவு, உணவு ஆகியவைகளுக்கு மிக தேவை உள்ளது. அதையும் பூர்த்தி செய்ய வேண்டிய நிலை உள்ளதால், விவசாயிகளுக்கு தேவை என்ற அடிப்படையில் கொடுத்து வருகிறோம்.*

*மேலை நாடுகளில் ஒரு மாடு 32 லிட்டர் தரும் நிலையில், நமது நாடுகள் 56 லிட்டர் தருவதை 1015 லிட்டராக உயர்த்தினால் விவசாயிகளுக்கு பலன் தரும். அதற்காக தான் நமது நாட்டு இனங்களை கொண்டு வர முயற்சி எடுத்து வருகிறோம்.*

*159 தரமான காளைகள் வைத்துள்ளோம். கிடாரி கன்றுகளை ஈனும் சினை ஊசி 2021 வரை 45 லட்சம் வரை ஊசி கொடுத்த நிலையில், கடந்தாண்டு 16 லட்சம் கொடுத்ததை அடுத்து, இந்தாண்டு 20 லட்சம் இலக்கு நிர்ணயித்துள்ளோம். வறட்சி காலங்களில் நல்ல இனங்கள் கொடுத்தால் தான் விவசாயிகளின் லாபத்தை அதிகரிக்க முடியும் என்பதால் இந்தாண்டு செயல் திட்டங்களில் வலுவாக திட்டமிட்டு வருகிறோம்.*

*அமுல் நிறுவனம் விவாதத்திற்கான பொருளே கிடையாது. உலகமயமாக்கல் பின் எங்கு வேண்டுமானாலும் விற்பனை செய்யலாம். நமது பொருட்கள் தேவை உள்ளது, மக்கள் வரவேற்பு உள்ளதால் நமது கவலை கொள்ள தேவையில்லை. ஆவின் முடிந்ததாக சொன்ன நிலையில் தற்போது 36 லட்சம் கொள்முதல் எப்படி செய்ய முடிந்தது? விற்பனை அதிகரிப்பு, தரமான கன்று இனங்கள் கொடுக்கிறோம், காப்பீடு, கடன் உதவி, கால்நடைகள் பராமரிப்பு என தொடர் நடவடிக்கை எடுத்து வருவதால் கொள்முதலில் பாதிப்பு ஏற்படாது என ஆரம்பத்திலிருந்து சொல்லி வருகிறேன். விற்பனை, தரம், விலை ஆகியவை ஒரே மாதிரியான செயல்முறைகள் திட்டம் வரவேற்பு உள்ளதால் எந்த பிரச்னையும் இருக்காது.*

*மாற்றுத்திறனாளிகள், வேலை இல்லாதவர்கள், திருநங்கைகள் என ஆவின் கடை நடத்தி அனுமதி கொடுத்து வருகிறோம். தமிழகத்தில் இன்னமும் கடைகள் இல்லாத இடங்களில் ஆவின் நிர்வாகத்தின் கிளைகள் அதிகரிக்க தேவை உள்ளது, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்று கூறினார்.*

*இந்த நிகழ்வின்போது, ஆவின் பொது மேலாளர்கள் ஜெயராமன், சண்முகம், துணைபதிவாளர்கள் (பால்வளம்) கணேசன், செந்தில், ஆவின் தொழிலாளர் முன்னேற்ற சங்க செயலாளர் ஆவின் ஆனந்த் ,தலைவர் குருசாமி, பொருளாளர் சண்முகம், வடக்கு மாவட்ட பொருளாளர் ரஹ்மான், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் தென்னை சிவா, ராம்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*



கோவை பந்தய சாலை பகுதியில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில், கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆவின் அதிகாரிகளுடன் பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆலோசனை நடத்தினார்.

## கூத்தாநல்லூரில் ரூ.1.30 கோடியில்

# புதிய காவல்நிலையக் கட்டிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் நன்றி!

*திருவாரூர், ஜுலை 2 -*

*திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர் பகுதிக்கு புதிய காவல் நிலையம் கட்ட ரூ.1.30 கோடியில் திட்டம் அறிவித்த தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும்,முயற்சிகளை மேற்கொண்ட சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணனுக்கு பொது மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.*

*திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர் வட்டம் பெருமளவில் இஸ்லாமிய மக்கள் வசிக்கும் பகுதியாகும். சிறுபான்மை மக்களுக்கு என்றைக்கும் பாதுகாவலாக விளங்கும் திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூத்தாநல்லூரை தாலுக்காவாக தரம் உயர்த்தி, மாணவ - மாணவிகளின் கல்விக்கு கல்லூரி, புதிய வகுப்பறை கட்டிடங்கள், சாலைகள், நீர்நிலைகள் தூர்வாரு தல், மருத்துவமனைகள் தரம் உயர்த்துதல், அரசு அலுவலக கட்டிடங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தந்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.*

*இந்த நிலையில் 1995ம் ஆண்டு முதல் கூத்தா நல்லூர் நகரத்தில் இயங்கிவரும் ஊராக காவல் நிலைய பழைய கட்டிடத்தை மாற்றி புதிய கட்டிடம் கட்டி, காவல்நிலையத்தினை மேம்படுத்த பொது மக்கள் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணனிடம் வைத்த கோரிக்கையை, அவர் தமிழ்நாடு முதல்வரிடம் வைத்த நிலையில், அதனை தாயுள்ளத்தோடு பரிசீலித்த முதல்வர் அவர்கள் ரூ 1.30 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட அறிவித்துள்ளார்.*


*முதல்வரின் இந்த அறிவிப்புக்கு பொதுமக்களும்,சமூக ஆர்வலர்களும், அனைத்து அரசியல் இயக்கங்களும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், முயற்சிகளை மேற்கொண்ட சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணனுக்கும் நன்றியை தெரிவித்துள்ளனர்.*



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் விக்கிரவாண்டி நகரம், பாகம் 228 பகுதியில் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தனர். இந்நிகழ்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் சபா ராஜேந்திரன் , தாயகம் கவி , விழுப்புரம் நகர செயலாளர் சக்கரை, விக்கிரவாண்டி நகர செயலாளர் நைனார் முகமது, விக்கிரவாண்டி நகர தலைவர் அப்துல் சலாம், பகுதி செயலாளர்கள் டி.எஸ்.பி. ராஜகோபால், சொ.வேலு, வி.சுதாகர், ஐசிஎப்.வா.முரளிதரன், பி.கே.மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.தமிழ்வேந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் க.இராசவேலு
### ஜுலை 2 (2013)



நீதிக்கட்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பின்னர் கழகம் துவங்கப்பட்ட போதே, கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கியவர்.

திருவரங்கம் பகுதியில் கழகம் வளர பாடுபட்ட மூத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

மதி எனும் இதழை நடத்தியும், நாடகங்கள் எழுதி அதில் நடித்தும், 'செண்பகத் தமிழ் அரங்கு' எனும் தமிழ் அமைப்பினை தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழிலக்கியக் கூட்டங்கள் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றி அந்நகர வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2010ல் தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு வழங்கும் விழாவில் 'அகவை முதிர்ந்த தமிழறிஞர்' எனும் விருதினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**